# உலகத் தமிழ் அமைப்பு
## World Thamil Organization, Inc.
(A Non-Profit Organization registered in USA, Established 1991)


**தலைவர்**
திரு இராசரத்தினம் குணநாதன்
கனடா

**துணைத் தலைவர்**
முனைவர் இராசா இளங்கோவன்
நியூ செர்சி

**செயலாளர்**
திரு அரங்கநாதன் கன்னியப்பன்
புளோரிடா

**இணைச் செயலாளர்**
திரு சேகர் கருப்பன்
கனடா

**பொருளாளர்**
முனைவர் தணி குமார் சேரன்
வட கரொலினா

**இயக்குநர்கள்**

திரு இரவிக்குமார் சுப்பிரமணியம்
வெர்சீனியா

முனைவர் வை. க. தேவ்
டென்னசி

முனைவர் தாமோதரன் சிவராசு
புளோரிடா

திரு திருஞானம் மோகன்
நியூ செர்சி


நவம்பர் 14, 2022
வாசிங்டன் டி.சி.

மாண்புமிகு முதல்வர் உயர்திரு மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு, வணக்கம் !

உலகத் தமிழ் அமைப்பு 1991 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நிறுவப்பட்டது; உலகளாவிய தமிழர்களின் அடிப்படை உரிமைகள், நீதி - நலன்களைப் பாதுகாப்பது, மீட்டெடுப்பது ஆகியவற்றின் பொருட்டுக் கடந்த 31 ஆண்டுகளாகச் செயலாற்றி வருகின்றது. தமிழர்களின் அரசியல் அதிகார மாண்பு, சமூக மேம்பாடு, பண்பாட்டுப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக உலகத் தமிழ் அமைப்பு தொடர்ந்து உழைத்து வருகின்றது.

தண்டனைக்காலம் முடிந்துவிட்ட பின்னரும் நீண்ட நெடிய சிறை வாழ்க்கைக்குப் பிறகு உச்ச நீதிமன்றதால் விடுதலை அடைந்த முருகன், சாந்தன், இராபர்ட் பயஸ், செயக்குமார் ஆகிய நால்வரையும் தமிழ்நாட்டரசு திருச்சி நடுவண் சிறையிலுள்ள சிறப்புக் காவல் முகாமில் அடைத்துள்ளது உலகத் தமிழர்களிடம் கடும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது . இந்நிலையில், இன்று அந்நால்வருடைய சொந்த நாடான இலங்கையிடம் ஒப்புதல் பெற்ற பிறகு, அந்நால்வரும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என செய்திகள் வருவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல கொடுமையாக உலகத் தமிழர்களின் மனதில் தைக்கிறது.

பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கையிடம் அவர்களை ஒப்படைப்பது அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும். எனவே அவர்களுடைய விருப்பத்தை அறிந்து அதற்கு ஏற்ப உரிய ஏற்பாடுகளை தமிழ்நாட்டரசு செய்து தர வேண்டும்.

இக்கோரிக்கையை உலகத் தமிழர்களின் சார்பாக நாங்கள் முன் வைக்கிறோம். தங்களின் கருணையும், துணிவும் மிக்க இந்த நடவடிக்கை வரலாற்றில் தமிழர்கள் அனைவராலும் நன்றியுணர்வோடு போற்றப்படும் என உறுதியாகக் கூறுகின்றோம்.

அன்புடன்,

இராசரத்தினம் குணநாதன்
தலைவர், உலகத் தமிழ் அமைப்பு


105 Ronaldsby Drive, Cary, North Carolina 27511, USA | wtogroup@gmail.com | www.worldthamil.org